THE HINDU
Region

# Proposal for medical college in Karaikal under Centre's consideration: Union Minister

**Prataprao Jadhav promises all assistance to Puducherry and development of Jipmer; says future requirements of the institute will be met through allocation of funds from the Union government**

The Hindu Bureau
PUDUCHERRY

The proposal of the territorial administration to establish a medical college in Karaikal is under the active consideration of the Central government, Union Minister of State for Health and Family Welfare and MoS for the Ministry of Ayush Prataprao Jadhav said here on Tuesday.

Interacting with reporters after inaugurating the renovated Emergency Medicine and Trauma Care (EMS) block at Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research, the Minister said the territorial administration has sought permission to start the medical college in Karaikal under the Centre's 'One District, One Medical College' initiative. "It is under the active consideration of the Ministry of Health. We are examining the proposal," he said.



Union Minister of State for Health and Family Welfare Prataprao Jadhav, Lieutenant Governor K. Kailashnathan and Chief Minister N. Rangasamy at the renovated trauma care unit at Jipmer.

Promising all assistance to Puducherry and the development of Jipmer, the Union Minister said the future requirements of the institute would be met through allocation of funds.

Vir Singh Negi, Director, Jipmer said a 476-bed hospital of the institute would be set up in Karaikal. The hospital would be ready by June 2027. Speaking about other plans at Jipmer, the Director said the upgradation and modernisation of the Regional Cancer Centre would be completed soon and by next year a 150-bed critical care block would start functioning.

The renovation of the trauma care unit was taken up at a cost of ₹4.74 crore and it has now been designated as Level 1 Trauma Centre with facilities to handle 350 to 400 emergency cases every day. The upgradation included a covered bay for ambulance, resuscitation area, fire safety infrastructure and expansion of triage area.

The Union Minister inaugurated the facility in the presence of Lieutenant Governor K. Kailashnathan and Chief Minister N.Rangasamy.

THE NEW INDIAN EXPRESS

## JIPMER's renovated Emergency Block Inaugurated

Puducherry: The newly renovated Emergency Medicine and Trauma Care (EMTC) Block at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER), Puducherry, was dedicated to the nation by Union Minister of State for Health and Family Welfare (Independent Charge) Prataprao Jadhav on Tuesday. This significant development marks a major leap in JIPMER's emergency and trauma care capabilities, bringing the institution in line with national standards in disaster management and fire safety. Executed by the Central Public Works Department (CPWD) at a cost of ₹4.74 crore, the renovation includes a comprehensive fire safety upgrade. The EMTC Block has now been designated as a Level 1 Trauma Centre, equipped to handle 350 to 400 emergency cases daily.

THE NEW INDIAN EXPRESS

# Integrated MBBS-BAMS course planned at JIPMER

Puducherry: The Union government is planning to introduce an integrated medical course combining MBBS (Bachelor of Medicine and Bachelor of Surgery) and BAMS (Bachelor of Ayurvedic Medicine and Surgery) at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER), Union Minister of State for Health and Family Welfare and AYUSH (Independent Charge) Prataprao Jadhav announced on Tuesday. Speaking to the media after inaugurating the renovated Emergency and Trauma Care Centre at JIPMER, Union Minister of State Jadhav said the course is still at the conceptual stage and efforts are ongoing to develop a new syllabus. He also announced the setting up of a Centre for Integrated Medicine and Research at the institute. Jadhav, who reviewed ongoing and proposed projects during a meeting with the JIPMER, said that medical facilities in JIPMER would be enhanced as per the plans drawn up by JIPMER to meet the requirements of the people. He assured full financial support for the institute's expansion. ENS

THE TIMES OF INDIA, CHENNAI
WEDNESDAY, MAY 28, 2025

# Jipmer's renovated emergency block inaugurated

Union minister of state for health and family welfare Prataprao Jadhav dedicated to the nation a renovated emergency medicine and trauma care block at Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer) on Tuesday. It was renovated at a cost of ₹4.74 crore. Later, Jadhav said a centre for integrated medicine and research will be established soon at Jipmer. The renovated block can now handle 350 to 400 emergency cases per day.

இந்து தமிழ் திசை

காரைக்காலில் மருத்துவக்கல்லூரி அமைக்கும்

# புதுச்சேரி அரசின் முன்மொழிவு பரிசீலனையில் உள்ளது

## மத்திய இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் தகவல்

■ புதுச்சேரி

காரைக்காலில் மருத்துவக் கல்லூரியை நிறுவுவதற்கான புதுச்சேரி அரசின் முன்மொழிவு தீவிர பரிசீலனையில் இருப்பதாக மத்திய சுகாதார இணையமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

புதுவை ஜிப்மரில் ரூ.4.74 கோடியில் அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட தீயணைப்பு பாதுகாப்பு அம்சங்களுடன், நாள் ஒன்றுக்கு 350 முதல் 450 அவசர சிகிச்சை நோயாளிகளை கையாளும் திறன் கொண்டது. இதனை மத்திய இணைஅமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் நேற்று திறந்து வைத்தார்.

துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் முன்னிலை வகித்தார். முதல்வர் ரங்கசாமி தலைமை வகித்தார். பேரவைத் தலைவர் செல்வம், செல்வகணபதி எம்.பி, ஆறுமுகம் எம்எல்ஏ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதைத்தொடர்ந்து மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் ஜிப்மரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஜிப்மர் வளர்ச்சிக்கு தேவையான நிதியை ஒதுக்குகிறோம். நடப்பாண்டு ரூ.1,450 கோடி ஜிப்மருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பல பிரிவுகளில் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பல மேம்பாட்டு திட்டப்பணிகள் நடக்கின்றன. ஒருங்கிணைந்த மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மையம் ஜிப்மரில் நிறுவப்படும்.

புதிய கட்டுமானங்களை உரிய காலத்துக்குள் செயல்படுத்த அறிவுறுத்துவோம். காரைக்காலில் மருத்துவக் கல்லூரியை நிறுவுவதற்கான புதுச்சேரி அரசின் முன்மொழிவு மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது என்றார்.

இதையடுத்து ஜிப்மரின் செயல்பாடுகள் தொடர்பாக அமைச்சர் ஆய்வுக்கூட்டம் நடத்தினார்.

இந்நிலையில் ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நேகி கூறுகையில், "சேதராப்பட்டில் ரூ. 846 கோடியில் மேம்பட்ட அவசர சிகிச்சை மையம், உறுப்பு மாற்று மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. காரைக்காலில் ஜிப்மர் மருத்துவமனை வரும் 2027 ஜூனுக்குள் இயங்க தொடங்கும். இங்கு 492 படுக்கை வசதிகள் அமையும்.

ஜிப்மரில் மருந்துகள் வாங்க கூடுதல் கவுன்ட்டர்கள் ஏற்படுத்தியுள்ளோம். பார்மசியையும் அதிகரித்துள்ளோம். மத்திய அரசு விடுமுறை தினங்களில் அவசர சிகிச்சை பிரிவு இயங்கும் என்று தெரிவித்தார்.

புதுச்சேரி நோயாளிகளுக்கு ஜிப்மரில் சிகிச்சை கிடைப்பதில் பிரச்சினை உள்ளதே என்று கேட்டதற்கு, அதுபோல் வித்தியாசம் பார்ப்பதில்லை. கூடுதல் மக்கள் வருகின்றனர் என்று தெரிவித்தார்.



● புதுச்சேரி ஜிப்மரில் புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவை மத்திய இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் திறந்து வைத்தார். உடன் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி, பேரவைத் தலைவர் செல்வம், அரசு கொறடா ஏகேடி. ஆறுமுகம், செல்வகணபதி எம்.பி. படம்: சாம்ராஜ்

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
28.5.2025 (புதன்கிழமை)



ஜிப்மரில் அவசர சிகிச்சை பிரிவை மத்திய மந்திரி பிரதாப்ராவ் ஜாதவ் திறந்து வைத்து பார்வையிட்டார். கவர்னர் கைலாஷ்நாதன், முதல்–அமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், செல்வகணபதி எம்.பி. ஆகியோர் அருகில் உள்ளனர்.

### காரைக்காலில் 476 படுக்கைகளுடன் ஆஸ்பத்திரி:

# ஜிப்மருக்கு ரூ.1,450 கோடி ஒதுக்கீடு

## மத்திய மந்திரி பிரதாப் ராவ் ஜாதவ் தகவல்

புதுச்சேரி, மே.28–
ஜிப்மருக்கு நடப்பாண்டு ரூ.1,450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய இணை மந்திரி பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

### அவசர சிகிச்சை பிரிவு

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள ஜிப்மர் ஆஸ்பத்திரியில் ரூ.4 கோடியே 74 லட்சம் மதிப்பில் அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவு புனரமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. விழாவில் மத்திய ஆயுஷ் மற்றும் சுகாதாரத்துறை இணை மந்திரி பிரதாப்ராவ் ஜாதவ் கலந்துகொண்டு மருத்துவ சிகிச்சை பிரிவை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்த விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன், முதல்–அமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், செல்வகணபதி எம்.பி., அரசு கொறடா ஏ.கே.டி. ஆறுமுகம் எம்.எல்.ஏ., ஜிப்மர் இயக்குனர் வீர்சிங் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.1,450 கோடி ஒதுக்கீடு

இதைத்தொடர்ந்து மத்திய மந்திரி பிரதாப் ராவ் ஜாதவ் நிருபர்களிடம் கூறியதாவது:-

தென்னிந்தியாவில் எய்ம்ஸ் ஆஸ்பத்திரிக்கு இணையாக ஜிப்மர் விளங்கி வருகிறது. ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் இருந்து இதுவரை 18 ஆயிரம் மாணவர்கள் படித்து சென்றுள்ளனர். இங்கு 1,800 படுக்கை வசதி உள்ளது. தற்போது அவசர சிகிச்சை பிரிவு மேம்படுத்தப்பட்டுள்ளது.

புதிய கட்டுமானங்கள் தொடர்பாக ஆய்வு செய்துள்ளோம். அதை உரிய காலத்துக்குள் செயல்படுத்தவும் அறிவுறுத்துவோம். ஆயுர்வேதம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளை தொடங்கும் திட்டம் உள்ளது. மேலும் ஜிப்மருக்கு நடப்பாண்டு ரூ.1,450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பல மேம்பாட்டு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

### 476 படுக்கைகளுடன் ஆஸ்பத்திரி

ஜிப்மரில் மருந்துகள் வாங்க கூடுதல் கவுண்டர்கள் ஏற்படுத்தி உள்ளோம். தள்ளுபடி விலையில் மருந்தகங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. ஜிப்மரை பொறுத்தவரை அனைத்து மாநிலங்களை சேர்ந்தவர்களுக்கும் பாகுபாடின்றி சிகிச்சை அளிக்கப்படுகிறது.

காரைக்கால் ஜிப்மர் ஆஸ்பத்திரி 476 படுக்கை வசதிகளுடன் 2027–ம் ஆண்டு திறக்கப்படும். மேலும் காரைக்காலில் புதுச்சேரி அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க கோரிக்கை வைத்துள்ளது. அது பற்றி ஆலோசித்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

தினமலர்

# ஜிப்மரில் புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு திறப்பு



புதுச்சேரி ஜிப்மரில் புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவை மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் திறந்து வைத்தார். அருகில், கவர்னர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி.

புதுச்சேரி, மே 28–

ஜிப்மரில் ரூ. 4.74 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட அவசர மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவு திறப்பு விழா நேற்று நடந்தது.

மத்திய ஆயுஷ் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவை திறந்து வைத்தார். கவர்னர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், அரசு கொறடா ஆறுமுகம், ஜிப்மர் இயக்குநர் வீர் சிங் நெகி ஆகியோர் பங்கேற்றனர்.

புதிதாக திறக்கப்பட்ட அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவு, மேம்படுத்தப்பட்ட தீயணைப்பு பாதுகாப்பு அம்சங்களுடன் மத்திய பொதுப்பணித் துறையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. தினசரி 350 முதல் 400 அவசர சிகிச்சை நோயாளிகளை கையாளும் வசதிகள் கொண்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு நோயாளிகள் பராமரிப்பு, செயல் திறன் மற்றும் அவசர கால தயார்நிலை ஆகியவற்றை முக்கிய நோக்கமாக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

தினமலர்

# ஜிப்மரில் ஆயுர்வேத மருத்துவ படிப்பு மத்திய இணை அமைச்சர் தகவல்

புதுச்சேரி, மே 28–

ஜிப்மரில் அடுத்த கல்வியாண்டு முதல் எம்.பி.பி.எஸ்., ஆயுர்வேத இன்டர்கிரேட் மருத்துவ படிப்புகளை துவங்க ஆலோசித்து வருவதாக மத்திய இணை அமைச்சர் தெரிவித்தார்.

ஜிப்மரில் புதுப்பிக்கப்பட்ட அவசர மற்றும் விபத்து சிகிச்சை பிரிவை திறந்து வைத்த பின், மத்திய இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் கூறியதாவது;

தென்னகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இணையாக ஜிப்மர் இயங்கி வருகிறது. ஜிப்மரில் பல சிகிச்சை பிரிவுகளின் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. புதிய கட்டுமானங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட உள்ளது.

அடுத்த கல்வியாண்டு முதல் எம்.பி.பி.எஸ்., ஆயுர்வேத இன்டர்கிரேட் மருத்துவ படிப்புகளை துவங்க ஆலோசித்து வருகிறோம். நடப்பாண்டு ஜிப்மருக்கு 1,450 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காரைக்கால் ஜிப்மர் மருத்துவமனை கிளை 470 படுக்கை வசதிகளுடன், வரும் 2027ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

காரைக்காலில் அரசு மருத்துவ கல்லுாரி அமைப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம். சண்டிகர் எய்ம்ஸ் மருத்துவமனையில் கட்டணத்திற்கு அளிக்கப்படும் கேன்சர் உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகள், மருத்துகள் ஜிப்மரில் இலவசமாக வழங்கப்படுகிறது. ஜிப்மரில் மானிய விலையில் மருந்துகள் வழங்கும் வகையில் மக்கள் மருந்தகம் அமைக்கப்பட்டுள்ளது.

பிரசவத்திற்கு புதுச்சேரி மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை என, புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மருந்து வாங்க நீண்ட வரிசையில் நிற்பதை தடுக்கும் வகையில் கூடுதல் கவுண்டர்கள் அமைப்படும்' என்றார்.

தினகரன்

புதுச்சேரி ஜிப்மரில் ரூ.4.74 கோடியில் விபத்து சிகிச்சை பிரிவு புதுப்பிப்பு

# எம்பிபிஎஸ், ஆயுர்வேதா ஒருங்கிணைந்த மருத்துவ படிப்புகள் உருவாக்கப்படும்



புதுவை ஜிப்மரில் ரூ.4.74 கோடியில் புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவை ஒன்றிய இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் துவக்கி வைத்தார். உடன் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம்.

## ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் தகவல்

**புதுச்சேரி, மே 28:** எம்பிபிஎஸ், ஆயுர்வேதா ஒருங்கிணைந்த மருத்துவ படிப்புகளை உருவாக்க ஆலோசனை நடத்தி வருவதாக ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் பிரதாப்பராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

புதுவை ஜிப்மரில் ரூ.4.74 கோடியில் அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவு புதுப்பிக்கப்பட்டு உள்ளது. புதுப்பிக்கப்பட்ட சிகிச்சை பிரிவு துவக்க விழா நேற்று நடந்தது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் முன்னிலை வகித்தார். முதல்வர் ரங்கசாமி தலைமை தாங்கினார். புதுப்பிக்கப்பட்ட அவசர, விபத்து சிகிச்சை பிரிவை ஒன்றிய இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் துவக்கி வைத்தார். சபாநாயகர் செல்வம், செல்வகணபதி எம்பி, ஏகேடி ஆறுமுகம் எம்எல்ஏ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புதுப்பிக்கப்பட்ட சிகிச்சை பிரிவு மேம்படுத்தப்பட்ட தீயணைப்பு பாதுகாப்பு அம்சங்களுடன் ஒன்றிய பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டுள்ளது. இந்த பிரிவு நாள் ஒன்றுக்கு 350 முதல் 450 அவசர சிகிச்சை நோயாளிகளை கையாளும் திறன் கொண்டது. நோயாளிகள் பராமரிப்பு, செயல்திறன், அவசரகால தயார்நிலை ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு இந்த பிரிவு வடிவமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு உள்ளது.

இவ்விழாவில் பங்கேற்ற ஒன்றிய சுகாதாரத் துறை இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் நிருபர்களிடம் கூறியதாவது: 'தென்னகத்தில் எய்ம்ஸ்க்கு இணையானது ஜிப்மர். வளர்ச்சிக்கு தேவையான நிதியை ஒதுக்குகிறோம். பல வளர்ச்சித் திட்டங்கள் நடக்கிறது. இக்கல்லூரியில் இருந்து 18 ஆயிரம் மாணவர்கள் படித்து வெளியே வந்துள்ளனர். 1800 படுக்கை வசதி உள்ளது.

அவசர சிகிச்சை பிரிவு மேம்படுத்தப்பட்டு உள்ளது. பல பிரிவுகளில் வசதிகள் மேம்படுத்தப்பட்டு உள்ளது. புதிய கட்டுமானங்கள் தொடர்பாக ஆய்வு செய்ய உள்ளோம். அதை உரிய காலத்துக்குள் செயல்படுத்தவும் அறிவுறுத்துவோம். எம்பிபிஎஸ், ஆயுர்வேதா இன்டர்கிரேட் படிப்புகளை தொடங்க ஆலோசித்து வருகிறோம். நடப்பாண்டு ஜிப்மருக்கு ரூ.1450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல மேம்பாட்டு திட்டப்பணிகள் நடக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### காரைக்கால் ஜிப்மர் கிளை 2027ம் ஆண்டு திறக்கப்படும்

விழாவில் ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நேகி கூறுகையில், 'காரைக்காலில் ஜிப்மர் மருத்துவமனை வரும் 2027 ஜூனுக்குள் இயங்கத் தொடங்கும். இங்கு 470 படுக்கை வசதிகள் அமையும். அனைத்து நிதியும் ஒன்றிய அரசு ஒதுக்கீட்டில் நடக்கிறது. காரைக்காலில் புதுச்சேரி அரசு மருத்துவக்கல்லூரி அமைக்க சுகாதாரத்துறைக்கு கோரிக்கை வந்துள்ளது. அதை ஆலோசித்து வருகிறோம். ஜிப்மரில் மருந்துகள் வழங்க கூடுதல் கவுன்டர்கள் ஏற்படுத்தியுள்ளோம். பார்மசியும் அதிகரித்துள்ளோம்.

வெளிப்புற சிகிச்சைப்பிரிவு விடுமுறை நாட்களை குறைக்க வாய்ப்பில்லை. ஒன்றிய அரசு விடுமுறை தினங்களை கடைபிடிக்கிறோம். அவசர சிகிச்சை பிரிவு இயங்கும். புதுச்சேரி நோயாளிகளுக்கு ஜிப்மர் சிகிச்சை கிடைப்பதில் பிரச்னை உள்ளதே என்று கேட்டதற்கு, அதுபோல ஏதும் வித்தியாசம் பார்ப்பதில்லை, கூடுதல் மக்கள் வருகின்றனர்' என்றார்.

தினமணி

# 2027-இல் காரைக்கால் ஜிப்மர் செயல்படத் தொடங்கும்

**மத்திய இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ்**

**புதுச்சேரி, மே 27:** புதுவை மாநிலம் காரைக்கால் பிராந்தியத்தில் வரும் 2027-ஆம் ஆண்டு ஜிப்மர் மருத்துவமனை செயல்படத் தொடங்கும் என மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

புதுச்சேரியிலுள்ள ஜிப்மரில் ரூ.4.74 கோடியில் அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை பிரிவு மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு புதுவை துணைநிலை ஆளுநர் கே. கைலாஷ்நாதன் முன்னிலை வகித்தார். முதல்வர் என். ரங்கசாமி தலைமை வகித்தார்.

ஜிப்மரில் மேம்படுத்தப்பட்ட அவசர, விபத்து சிகிச்சைப் பிரிவை மத்திய இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் திறந்து வைத்தார்.



புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் புதுப்பிக்கப்பட்ட அவசரப் பிரிவு மற்றும் விபத்து சிகிச்சை பிரிவை செவ்வாய்க்கிழமை திறந்து வைத்த மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ். உடன் துணைநிலை ஆளுநர் கே.கைலாஷ்நாதன், முதல்வர் என்.ரங்கசாமி உள்ளிட்டோர்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: தென் மாநிலங்களில் எய்ம்ஸுக்கு இணையாக ஜிப்மர் செயல்பட்டு வருகிறது. ஆகவே, ஜிப்மரின் மேம்பாட்டுக்கான நிதியை மத்திய சுகாதாரத் துறை அளித்து வருகிறது. அதனால், ஜிப்மரில் பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் இருந்து 18 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். ஜிப்மரில் நோயாளிகளுக்கு 1,800 படுக்கைகள் வசதி உள்ளன. அவசர சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல சிகிச்சைப் பிரிவுகளில் தற்போது உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

புதிய கட்டுமானங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய காலத்துக்குள் செயல்படுத்த அறிவுறுத்தப்படும். ஜிப்மரில் ஆயுர்வேதா இண்டர்கிரேட் எம்பிபிஎஸ் படிப்புகளை அறிமுகப்படுத்த ஆலோசிக்கப்படுகிறது.

நிகழாண்டில் ரூ. 1,450 கோடி நிதி ஜிப்மருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

காரைக்காலில் மத்திய அரசு சார்பில் ஜிப்மர் மருத்துவமனை வரும் 2027-ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் செயல்படத் தொடங்கும். அதில் 470 படுக்கை வசதிகள் அமையும். காரைக்காலில் புதுச்சேரி அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கும் கோரிக்கை பரிசீலிக்கப்படுகிறது.

ஜிப்மரில் மருந்துகள் வாங்க கூடுதல் பிரிவு ஏற்படுத்தப்படும். வெளிப்புற சிகிச்சைப் பிரிவு விடுமுறை நாள்களை குறைக்க வாய்ப்பில்லை. விடுமுறையிலும் அவசர சிகிச்சை பிரிவு இயங்கும். சிகிச்சையில் உள்ளூர், வெளியூர் வேறுபாடு பார்ப்பதில்லை என்றார்.

விழாவில் பேரவைத் தலைவர் ஆர். செல்வம், செல்வகணபதி எம்.பி, ஆறுமுகம் எம்எல்ஏ உள்பட பலர் கலந்துகொண்டனர்.

புதுப்பிக்கப்பட்ட சிகிச்சை பிரிவு மேம்படுத்தப்பட்ட தீயணைப்பு பாதுகாப்பு வசதியுடன், 350 முதல் 450 அவசர சிகிச்சை நோயாளிகள் பயன்பெறும் வசதியுள்ளது.